2. அறிவிப்பு

மாற்றுத் தலைவர்கள் பட்டியல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 9(1)–ன்கீழ், கீழ்க்காணும் உறுப்பினர்களை இப்பேரவையின் 10–வது கூட்டத் தொடருக்கான மாற்றுத் தலைவர்களாக,* Panel of Chairmen *ஆக நியமிக்கின்றேன்:*

1. திரு. பி.எம். நரசிம்மன்

2. திரு. எஸ்.பி. சண்முகநாதன்

3. திரு. சு. ரவி

4. திரு. இரா. குமரகுரு

5. திரு. சு. குணசேகரன்

6. திரு. வி.வி. இராஜன் செல்லப்பா

3. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

(அ) தமிழ்நாடு சூதாட்டம் மற்றும் காவல் சட்டங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2021

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்). 2021 ஆம் ஆண்டு தமிழ்நாடு சூதாட்டம் மற்றும் காவல் சட்டங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் கழகத்தினுடைய நிறுவனத் தலைவர், புரட்சித் தலைவர் பொன்மனச் செம்மல் மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். அவர்களையும், காலமெல்லாம் ஏழையெளிய மக்கள்மீது பாசம்கொண்டு, பரிவுகொண்டு, தங்களுடைய பொற்கால ஆட்சியில் நல்ல பல சமூகப் பாதுகாப்புத் திட்டங்களை நடைமுறைப்படுத்திய நம்முடைய மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன்.*